**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 263/2025**
**U/s. 151 CRPC r/w 7(1) CLA Act**
**PROSECUTION WITNESS NO. (LW. )**

| | | |
|---|---|---|
| **Name** : ஜான் கென்னடி | | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** : | | **Age : /2026** |

**4** வது எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.18/2017 12.03.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 1.45 AN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் சிறப்பு உதவி ஆய்வாளராக தஞ்சை நகர கிழக்கு காவல்நிலைய பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது 01.12.2015 ம் தேதி காவல் ஆய்வாளர் அவர்களுடன் போலீஸ் பார்ட்டி சகிதம் நானும், உதவி ஆய்வாளர் திரு. செல்வமணி அவர்களும் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் திரு. ஞானவேல், திரு. ராஜ்குமார், திரு. கஸ்தூரியப்பா நிலைய சரகத்தில் ரோந்து பணியில் இருந்தபோது ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி அருண் என்கிற அருண்குமார் , ராஜா என்கிற பிரியாணி ராஜா அவர்களுடன் அவர்களுடைய நண்பர்கள் தினேஷ் என்கிற கொழுகட்டை தினேஷ் , விக்கி என்கிற விக்னேஷ் சத்யராஜ் , முருகன், சிட்டி மணி முகமது ஆரிப் ஆகியோருடன் கீழவாசல் ஆட்டுமந்தை தெரு, விசிறிகாரதெரு பிரிவு சாலை மாலை 16.30 மணிக்கு இடம் சென்று பார்த்தபோது ஆய்வாளர் விசாரிக்க அவர்களது நண்பன் வெங்கடேஷ் என்பவரை அடித்து கொலை செய்துவிட்டார்கள். கொலை செய்தவர்களின் உறவினர்களை பயமுறுத்தும் நோக்கத்துடன் இருந்தவர்களை காவல் சட்டம் 30(a) அமலில் இருப்பதாக கூறியும், கலைந்து செல்லும் படி எச்சரித்தும், குற்ற செய்யும் நோக்கத்துடன் இருந்தவர்களை 17.00 மணிக்கு காரணம் கூறி ஆய்வாளர் அவர்கள் கைது செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். 18.00 மணிக்கு எதிரிகளுடன் நிலையம் வந்து எதிரிகள் மீது நிலைய குற்ற எண் 488/2015 சட்டபிரிவுகள் **151crpc,7(1)(a) CLA Act** ன் படி வழக்கு பதிவு செய்து, எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினோம். ஆய்வாளர் எங்களை விசாரிக்க நடந்ததை கூறினோம்.

**<u>4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கில் பிரிவு 30(2) அமலில் உள்ளது என்பதை ஒலிபெருக்கி மூலம் தகவல் கொடுக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதுபோல் இந்த வழக்கில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விசிறிகார தெரு வீடுகள் நிறைந்த பகுதி என்று சொன்னால் சரிதான். நான் ஆய்வாளர் விசாரணையின்போது எதிரிகள் எந்த திசையிலிருந்து வந்தார்கள் என்றோ , நாங்கள் எந்த திசையிலிருந்து வந்தோம் என்றோ சொன்னேனா என்றால் இல்லை. வெங்கடேசன் என்பவரை கொலை செய்த உறவினர்களை பயமுறத்தவேண்டும் என்ற எண்ணத்துடன் கூடியிருந்தவர்களை கலைந்து போக சொன்னதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றாலும், அந்த உறவினர் யார் என்று நானோ அல்லது ஆய்வாளரோ விசாரித்தோமா என்றால் இல்லை. நாங்கள் சம்பவயிடம் சென்றபோது எதிரிகள் எங்களை தாக்க முற்படவில்லை என்றாலும், நாங்களும் எதிரிகளை தாக்கவில்லை என்றால் சரிதான்.

2. நான் சொன்ன நாள் , நேரத்தில் எந்த வித சம்பவமும் நடைபெறவில்லையென்றாலும் மேற்படி சட்டபிரிவு இவ்வழக்கிற்கு பொருந்ததாது என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தில் தஞ்சை நகர எல்லைக்குள் இதுபோன்று வழக்குகள் போடப்பட்டன என்றால் சரிதான். விசாரணைக்காக எதிரிகளை அழைத்து சென்று மேலதிகாரிகளின் உத்தரவின் பேரில் காவல்நிலைய புள்ளி விவர அறிக்கைக்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆய்வாளர் அவர்களால் போடப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது காவல்நிலையத்தில் கையேடு பராமரிப்பது வழக்கம் என்றால் சரிதான். மேற்படி வழக்கு சம்மந்தமாக கையேட்டில் குறித்து மேற்படி கையேட்டினை உதவி ஆய்வாளர் விசாரணையின்போது ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைக்கவில்லை. மேற்படி சம்பவம் நடைபெறாத காரணத்தினால் தான் நாங்கள் கையேட்டில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம்- S.T. கனிமொழி.,
நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.